## சீடத்துவம் : அழைத்து, தேர்தெடுத்து, அனுப்புதல்

## மார்ச் 2014

## நெருங்கிய நட்புக்கு அழைப்பு

சிந்திக்க : தனிப்பட்ட முறையில் நட்புறவு கொள்ள கடவுள் நம்மை அழைக்கிறார். கடவுளுடன் தனிப்பட்ட நட்புறவு கொண்டிருக்காவிட்டால் உலக "சக்திகள்" நம்மை எளிதாக திசை திருப்பிவிடும்.

ஆரம்ப பாடல் : *<u>என் ஆயன் என் ஆண்டவர்</u>*

என் ஆயன் என் ஆண்டவர்
இனி எனக்கு என்ன குறைவு – என்

இருளில் நான் எங்கு சென்றாலும்
தீமைகள் எதற்கும் பயமில்லை
ஏனெனில் ஆண்டவர் என்னோடு
இருக்கின்றார் என்றும் ஆனந்தமே
அவர் செங்கோலும் கைத்தடியும்
எனக்கு ஆறுதல் அளிக்கின்றன
இறைவன் துணையால் எனக்கு பயமில்லை – என்

ஆரம்ப செபம் : இறை இயேசுவின் பிரசன்னத்தை வேண்டி ஒருவர் செபிக்கவும்.

வாழ்வைப் பார்த்தல்

சூசை ஓர் பாரம்பரை கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். அவரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒருவர்கொருவர் நட்புடன் உறவாடி வந்தனர். அனைவரும் ஜோகூர்பாருவில் வசித்து வந்தனர். திருமணத்திற்க்கு பிறகு சூசை சிங்கப்பூரில் வேலை செய்யத் தொடங்கினார். காலை 4.00 மணிக்கு புறப்பட்டு இரவு 7.00மணிக்கே வேலை முடிந்து வீடு திரும்புவார். மனைவி, பிள்ளைகளுடன் சூசை செலவிடும் நேரம் மிகக் குறைவு. ஞாயிற்றுக்கிழமைகளிலும் ''ஓவர் டைம்'' வேலை. திருப்பலியில் பங்கு கொள்ள முடியவில்லை. சூசையின் நோக்கமெல்லாம் பணம் சம்பாதிப்பது.

ஓர் விசுவாசமிக்க பாரம்பரிய கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த சூசை இவ்வாறு மாறியது கண்டு அவர் மனைவி வியப்பும் வேதனையும் அடைந்தார். கடவுளுக்கும் குடும்பத்திற்க்கும் சூசைக்கு நேரம் இல்லாமல் போய்விட்டது. ஒரு நாள் சூசையிடம் அவர் மனைவி இதைப் பற்றி போசினார். அச்சமயம் பங்கில் நடைபெற்ற குடும்ப வாழ்வு பற்றிய கருத்தரங்கில் கலந்துக் கொள்ள செய்தார் அவர் மனைவி. இக்கருத்தரங்கு வழியாக கடவுள் மற்றும் குடும்ப காரியங்களிலிருந்து விலகி இருந்ததை உணர்ந்துக் கொண்டார். ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்வதை தவிர்த்து விட்டார். இந்த முடிவு கடவுளோடு நெருக்கத்தை ஏற்படுத்தியது. ஞாயிறு திருப்பலிக்கு குடும்பமாக செல்ல முடிந்தது.

தியானிக்க: கடவுளுக்கும் எனக்கும், எனக்கும் குடும்பத்திற்க்கும் உள்ள உறவை எப்படி வளர்ப்பது, பகிர்ந்து கொள்ளவும் (இருவர் இருவராக).

இறைவனுக்கு செவிசாய்த்தல் : அருளப்பர் 10: 14 – 15, 27 -28

- வாசகத்தை இரண்டு முறை வாசிக்கவும்.
- வாசகத்திலிருந்து மனதைத் தொட்ட வார்த்தை அல்லது வசனத்தை இடைவெளி விட்டு மூன்று முறை சத்தமாக பக்தியோடு சொல்லவும்.
- தேர்வு செய்த வார்த்தை அல்லது வசனத்தைத் தியானிக்க இரண்டு நிமிட மௌனம் காக்கவும்.
- சிறு குழுக்களில் உங்கள் மனதைத் தொட்ட வார்த்தை அல்லது வசனத்தைப் பகிர்ந்து கொள்ளவும்.
- இவற்றையும் பகிர்ந்து கொள்ளவும்:

1. கடவுளோடும் குடும்பத்தோடும் எனக்கு உள்ள உறவை எவ்வாறு மேம்படுத்திக் கொள்ள முடியும்?

அன்பில் வாழ்தல்

- விவாதிக்கவும். நமது அதிச மக்களிடையே கடவுள், குடும்பம் ஆகிய உறவு வளர, விழிப்புணர்வு அவசியம். இந்த விழிப்புணர்வை எவ்வாறு கொண்டு வரலாம்?
- கடந்த மாத அதிச செயல் திட்டம் (அதிச மரம்) எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்று பொறுப்பாளர் அறிக்கை சமர்ப்பிக்கலாம்.

இறுதி செபம்

ஒன்று சேர்ந்து செபிப்போம்:

- தனிப்பட்ட கருத்துக்காகவும், குடும்பத்திற்க்காகவும்,….
- தனிப்பட்ட முடிவுகளுக்காக,….

இறுதிப் பாடல்: *<u>அப்பா நான்</u>*

அப்பா நான் தவறு செய்தேன்
உன் அன்பை உதறிச் சென்றேன்
நான் கெட்டலைந்து ஓடி வந்தேன்
என்னைக் கண்பாரும் உந்தன் பிள்ளை நான்

பாடிவரும் பறவைகளும்
காடுகளில் மிருகங்களும்
உன்னன்பில் மகிழ்ந்திருக்க
நான் உன்னைப் பிரிந்து நொந்தேன் - அப்பா

திருவழிப்பாடு : முதல் தேர்வாளர் சடங்கு – தவக்கால முதல் ஞாயிறு (9மார்ச் 2014)